II. ANNOUNCEMENTS

(1) *Message from the Governor*

DEPUTY CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970.

(2) *Messages from the Assembly*

DEPUTY CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Tamil Nadu Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Validation of Cess) Bill, 1970 (L.A. Bill No. 29 of 1970), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received messages from the Hon. Speaker, Tamil Nadu Legislative Assembly, transmitting copies of the following Bills, as passed by the Assembly, and signed by him for the concurrence of the Council :—

1. The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 30 of 1970).

2. The Tamil Nadu Requisitioning of Motor Vehicles Bill, 1970 (L.A. Bill No. 32 of 1970).

III. ADJOURNMENT MOTION *Re* MURDER OF FOUR PERSONS IN VELARKOTA VILLAGE BY NAXALITES

DEPUTY CHAIRMAN : I have recieved notice of an adjournment motion from the hon. Member Thiru T. K. Subbiah to discuss a definite matter of urgent public importance, namely, the murder of four persons in Velarkota Village by the so-called Naxalites and the failure of the Government to give protection to the law-abiding citizens and keep the unsocial elements under check.

I want to know from the hon. Member how the matter comes within the scope of the rules governing Adjournment Motions.

திரு. டி. கே. சுப்பையா : தலைவரவர்களே, என்றுமில்லாத வகையிலே தமிழகத்திலே கொஞ்ச நாளாக எங்கு பார்த்தாலும் கொலைகள் என்ற செய்தி பத்திரிகைகளில் அடிக்கடி வருகிறது. அது ஒரு மிகவும் பயங்கரமான நிலையைக் காட்டுகிறது. நீலகிரி மாவட்டத்தில் வேளர்கோட்டா கிராமத்தில் 5 பேர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். குழந்தைகள் மூவரும், பெற்றோர்கள் இருவர், ஆக ஐவர் கொலை செய்யப்பட்டு, குழந்தைகளின் தலைகள் வேறாக வெட்டப்பட்டிருக்கின்றன. அந்த விதமான பயங்கரமான நிலை அந்தப் பகுதியிலே தொடர்ந்து இருந்துகொண்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. இன்னும் கூட அந்த நிலை நீடிப்பதன் காரணமாக, அரசு தன்னுடைய நிலையிலிருந்து சரிவர கவனிக்க சந்தர்ப்பம் இல்லாமல் தவறி விடுமோ என்று ஐயப்பாடு ஏற்படுகிறது.

9th September 1970] [திரு. டி. கே. சுப்பையா]

இது மிக முக்கியமான காரியமானபடியால், இந்தச் சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டுமென்று கருது கிறேன். எனவே சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவா தத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : I want to know the viewpoint of the Government in this matter.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் ; தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த ஒத்திவைப்புப் பிரேரணை பற்றி, பல விவரங்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்-ஆப் போலீசிட மிருந்து முழு விவரங்களும் கேட்கப்பட்டிருக்கின்றன. செய்தித் தாள்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், குடும்பத் தலைவர், அவருடைய மனைவி, குழந்தைகள் மூன்று, ஆக ஐவர் கொலை செய்யப்பட்டிருப் பதாகவும், அதைச் செய்தவர்கள் நக்சலைட்டுகளாகவும் இருக்கக் கூடு மென்று சந்தேகப்படுகிற அளவிற்குத் தான் செய்தி வந்திருக்கிறது. ஏனென்றால் அந்தச் சம்பவம் நடந்த விதத்திலிருந்தும், அதுவும் தமிழக எல்லை ஓரமாக நடந்திருக்கிற காரணத்தாலும், அதைச் செய்தவர்கள் நக்சலைட்டுகளாக இருக்குமோ என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் வன்முறையில் செல்லாத அளவிற்கு தடுத்து நிறுத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் தமிழக அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. நக்சலைட்டு களை அடக்குவதிலே, அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்காணித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதிலே, தமிழக அரசு தீவிரமான கவனம் செலுத்தி, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பதை இந்த அவையினர் உணர்வார்கள். வேறு மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்திற்கு வந்த நக்சலைட்டுகளைக் கண்டு பிடிப்பதில், குறிப் பாக பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலிருந்தும், கேரள மாநிலத் திலிருந்தும் இங்கு வந்த நக்சலைட்டுகளைக் கண்டு பிடிப்பதில் நமது காவல் துறை மிகவும் உதவியாக இருந்திருக்கிறது. இந்த நக்சலைட்டு களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதில் இந்த அரசு கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. இந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்து வதற்கு இந்த அரசு தீவிரமாக முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றி முழு விவரங்கள் அரசுக்கு வந்து சேரவில்லை. இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து விவரம் கேட்கப் பட்டிருக்கிறது. அது வந்த பிறகு இம்மாதிரிக் காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதையும், தக்க பாதுகாப்பு முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்கிறேன். ஆனால் இந்த சபையின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கேற்ற அளவு நிலைமைகள் இல்லாத காரணத்தாலும், அதைப்பற்றிய தடுப்பு நடவடிக்கைகளில் காவல் துறை அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிற காரணத் தாலும், முழு விவரங்கள் கிடைத்தவுடன் அதுபற்றிப் புலன் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிற காரணத் தினாலும், இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[9th September 1970

DEPUTY CHAIRMAN : I have heard the hon. Member and the viewpoint of the Government. Though the subject-matter of the motion is a specific matter of recent occurrence, the matter sought to be discussed involves nothing more than the ordinary administration of law. I, therefore, withhold consent to the raising of the matter.

IV. STATEMENT BY THE MINISTER FOR LOCAL ADMINISTRATION CORRECTING ANSWER TO SUPPLEMENTARY QUESTION ON STARRED QUESTION 70

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட ரெயில்வே செஸ் நிதியைப் பயன் படுத்துவது பற்றிய சட்ட மன்றக் கேள்வி எண் 70(257) 1-9-1970 அன்று என்னால் பதிலளிக்கப்பட்டது.

திரு. கே. ராஜாராம் அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாக்களைக் கேட்டார் :

இந்த மாவட்டங்களில் செலவு செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மாவட்ட வளர்ச்சிக் குழுவின் அங்கீகாரம் இதற்கு வேண்டுமா ? அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு யூனியனுக்கும் இவ்வளவு என்று உத்தரவிட்டால் போதுமா ? மாவட்ட வளர்ச்சிக் குழுவில் இது வைக்கப்பட வேண்டுமா ? அரசாங்கத்தின் அனுமதியும் பெற வேண்டுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அத்துணை வினாக்களுக்கு, கீழ்க்கண்டவாறு நான் பதில் கூறினேன்:

''மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே இந்தப் பொறுப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். பெரும்பாலும் மாவட்ட வளர்ச்சி மன்றங்களையும், ஊராட்சி ஒன்றியங்களையும் கலந்து கொண்டு தான் செய்யப்படும் என்று கருதுகிறேன். மீண்டும் அரசாங்கத்தின் அனுமதிக்காக வரவேண்டியதில்லை என்று தான் நினைவு. இந்தச் சிக்கல் தான் குறைக்கப்பட்டிருக்கிறது.''

இதை மறு பரிசீலனை செய்ததில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பித்தது தெரிய வந்தது :

இரயில்வே செஸ் நிதி எந்தெந்த நோக்கங்களுக்குப் பயன் படுத்த வேண்டும் என்று அரசினர் ஜூன் மாதம் 1970-ஆம் ஆண்டு ஒரு பொது ஆணை பிறப்பித்தனர். இந்த ஆணைப்படி தஞ்சாவூர் உள்பட மற்ற சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகள் செயற்குறிப்புகளை முறைப் படுத்தி அரசினர் ஒப்புதலுக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளனர். ஆகையால் செயற்குறிப்புகள் அரசினரின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகும்.